மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வீடு கட்டுகிற பொறுப்பு ஊராட்சி ஒன்றியம் மூலமாகத்தான் கட்டப்படுகிறது. பாதைகள் போடுவது எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களால்தான் போடப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் கவனிக்கவேண்டுமென்று சொன்னாலும் அதற்கு என்று நிதி ஒதுக்கிய பிறகு தான் அவர்கள் அதைச் செய்ய வேண்டும். அரசாங்கம் எப்படி நிதி ஒதுக்குவது என்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது.

வெள்ள நேரத்தின் போது அளிக்கப்பெற்ற துணிகள்.

*வினா எண் 261—திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வெள்ள நிவாரணத்திற்கு அளிக்கப் பெற்ற துணிகள் திருச்சியில் கடை வீதியில் விற்கப்பட்டதாக புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) இல்லை.

(ஆ) இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்; இந்த வெள்ள நிவாரணப் பணிகளுக்காகத் தரப்பட்ட வேஷ்டியின் மதிப்பு எவ்வளவு ? புடவைகள் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள், அதன் மதிப்பு எவ்வளவு என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வேஷ்டி, சேலை சேர்ந்து ரூ. 32லிருந்து ரூ. 35, ரூ. 40 வரை போயிருக்கும்.

பரிசுபெற்ற திரைப்படங்களுக்கு வரி விலக்கு.

*வினா எண் 262—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரிசு பெற்ற திரைப்படங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கக் கோரி மாநில அரசுக்கு மத்திய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனின் அதன் விபரம் யாது?

1979 மார்ச் 7]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, குடும்பக் கட்டுப்பாடு முதலிய கொள்கைகளை பிரசாரம் செய்கிற காட்சிகள் வருகிற திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளிக்கவேண்டுமென்ற கோரிக்கை வந்துள்ளதா? மது விலக்கில் உறுதியாக இருக்கிறது எனப்படும் இந்த அரசு கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் மதுவிலக்கு பிரசாரம்செய்யும், பேரறிஞர் அண்ணா அவர்களின் திரைப்படமாகிய "நல்லதம்பி" மூலமாக நல்லமுறையில் பிரசாரம் நடத்தியிருக்கிறார்கள். ஆகவே குறிப்பிட்ட அந்த "நல்லதம்பி" படத்தினை எல்லா முக்கிய நகரங்களிலும், பகுதிகளிலும் ஓரிரு நாட்களாவது இலவசமாக நடத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனையை இந்த அரசு ஏற்றுக் கொள்ளத்தடை இல்லை என்று சொல்கிறேன். "நல்லதம்பி" படத்தை அவர்கள் பார்த்து வெகுநாட்களாகிவிட்டது என்று கருதுகிறேன். "நல்லதம்பி"யில் அவர்கள் மதுவிலக்கு பிரசாரம் மட்டும் செய்யவில்லை. ஏழை, பணக்காரர் என்ற பிரசாரத்தையும் செய்திருக்கிறார்கள். அதுவும் இப்போது தேவை. அதை ஏற்றுக் கொள்கிறேன்.

கோடிக்கரை பகுதியினை சுற்றுலா மையமாக்கல்:

*வினா எண். 263— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் தொகுதி கோடிக் கரையினை சுற்றுலா மையமாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

(ஆ) எப்பொழுது அத்திட்டம் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் தொகுதி கோடிக்கரையினை சுற்றுலா மையமாக்க தற்போது எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை.